# கற்றலில் கட்டுப்பாடு

வ. ஆறுமுகம்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினார். (நீதிநெறி விளக்கம்: 53)

ஒருவன் தான் மேற்கொள்ளும் முயற்சியில் ஒரே நோக்குடன் செயலாற்ற முனையும்போதே அவனுக்கு வெற்றி கிட்டுகின்றது. தான் எடுத்துக்கொண்ட கருமத்தில் கண்ணாயிருக்க வேண்டியதால் தன்னுடைய மனத்தை அலையவிடாமல் ஒரு நிலைப்படுத்தி வைத்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. மனத்தை அடக்கியாள மாட்டாதவன் வேறெந்த ஆற்றல்களைப் படைத்திருந்தாலும் வாழ்வில் ஏற்றங்காண்பது அருமை. காட்டில் தன்னிச்சையாகத் திரியும் குரங்கு மரத்துக்கு மரம், கொப்புக்குக் கொப்புத் தாவித் திரிவதைப்போலவே கட்டுப்பாடற்ற மனமும் அலைகின்றதென்பதனாலேயே அதனை 'மனமென்னும் குரங்கு' என்று அழைப்பர். மற்றெல்லாவற்றிலும் மனம் ஒரு வழிநின்று செயற்படுவது கற்றலுக்கு இன்றியமையாததாகும். இத்தனித்துவ இயக்கத்தையே கட்டுப்பாட்டின் மூலம் நெறிப்படுத்த விழைகின்றோம்.

கல்வியில் கட்டுப்பாடு என்று சிந்திக்கும்போது எமது எண்ணத்தில் எழுவது கற்கும் விடயத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்து, புறச் சூழ்நிலைகளால் அலைக்கப்படாமலும், பிறரை அலைக்கும் தன்மையில்லாமலும் செயற்படும் திறனாகும். கல்வியென்னும் செயற்பாட்டினை வரலாற்று நோக்கில் பார்ப்போமேயானால், ஆதிகால வழக்குகளில் மனத்தை ஒருவழிப்படுத்திக் கல்வியளிப்பதில் கவனஞ் செலுத்தப்பட்டது புலனாகும். அச்சியந்திர வசதிகள் இல்லாதிருந்த காலத்தில் மாணவன் குருவிடமிருந்து கற்பவை அனைத்தையும் மனதில் பதியவைத்தே கற்கவேண்டியிருந்தது. அத்தகைய ஒரு கட்டத்தினையே மேல்வரும் நன்னூற் சூத்திரம் காட்டுகின்றது.

கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்
திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்னவார் வத்தனாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்.

(நன்னூல் காண்டிகையுரை, பொதுப் பாயிரம்: 40)[2]

இது பொதுப்பாயிரத்தில் 'பாடங் கேட்டலின் வரலாறு' என்ற பகுதியின் ஆரம்பத்தில் வருகின்றது.

மேற்குறிப்பிட்ட சூத்திரத்தின்

''பருகுவ னன்னவார் வர்த்தனுகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுள னுக,,

என்னும் அடிகள் எமது கவனத்துக்குரியன. இவற்றுக்கு ஆறுமுக நாவலர் கொடுத்துள்ள உரை ''பசித் துண்பவனுக்கு உணவினிடத்துள்ள ஆசை போலப் பாடங்கேட்டலில் ஆசையுடையவனுகி, சித்திரப் பாவையைப் போல அசைவறு குணத்திேைடு அடங்கி, காதானது வாயாகவும் மனமானது கொள்ளுமிடமாகவும்'' என்பதாகும்.

மேற்குறித்த சூத்திரத்தில் நாம் காணும் மாணவன் பாடங் கேட்பதில் மனம் நிறைந்த ஆர்வத்துடன் ஈடுபடுபவனுக இருத்தலினுல் அவனிடத்தே காணப்படும் கட்டுப்பாடு அவனுகவே ஆக்கிக் கொண்டதாகும். பசியோடு இருக்கும் ஒருவன் தனக்குக் கிடைக்கும் உணவினைக் தவறவிட விரும்ப மாட்டான். அப்படியான நிலையில் அவனுடைய கவனம் முழுவதும் அந்த உணவினை உட்கொள்வதிலேயே இருக்கும். வேறெந்த விடயமும் அவனுக்கு முக்கியமாகாது. அது போலவே, அறிவுப் பசியோடு குருவிடம் செல்கின்ற மாணவன் அப்பசியைத் தீர்க்கக்கூடியதான, தனக்குக் கிடைக்கப்போகின்ற அறிவாம் அமிர்தத்தை உட்கொள்வதற்கு ஆர்வமுடையவனுகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கின்றுன். உட்கொள்ளும் போது அவனது கவனம் வேறெங்கு சென்றுலும் உட்கொள்ளப்படும் 'அறிவாம் உணவு' தவறி விரயமாகிவிடக்கூடும். எனவேதான் 'சித்திரத்தில் வரையப்பட்ட பாவையைப்போல எவ்வித அசைவும் இன்றி' இருக்கின்றுன். இப்படியான உள்ளம் ஒரு நிலைப்பட்ட, முயற்சியின் மூலந்தான் செவி வாயாகவும் நெஞ்சு கொள்ளுமிடமாகவும் அமைந்து அவனுக்கு அறிவென்னும் அமிர்தம் கிடைக்கின்றது.

ஆதிகாலக் கல்வி மரபுகளில் கல்வி கொள்ளுவதில் இவ்வழியே பெரிதும் பேணப்பட்டது. ஆதி இந்து மரபினை எடுத்துக்கொண்டால், குரு-சிஷ்ய ஒழுங்கு முறையில் அளிக்கப்பட்ட கல்வியில் இத்தகைய ஒழுக்கக் கட்டுப்பாடு பெரிதாகப் போற்றப்பட்டது. அறிவுநூல்கள் அனைத்தும் ஏட்டுவடிவிலேயே இருந்த அக்காலத்தில், கற்கவேண்டிய விடயங்களைக் குருவிடம் கேட்டறியும் சீடன் அவற்றை மனனஞ்செய்து தனது மனத்திற் பதித்துக்கொள்ள வேண்டியிருந்தது. அன்றைய சூழலில் அதனைச் செய்யக் கூடியதாயிருந்தது. ஒரு குருவிடம் கல்வி கற்ற சீடர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட அளவினதாகவே கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இச்சிறிய மாணவர் தொகை கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளின் போக்கினை எளிதாக்கியது. அத்துடன், அக்காலத்தில் மாணவர் கடைப்பிடித்த 'யோகப் பயிற்சிகளும்' மனத்தை ஒருவழிப்படுத்த உதவின.

இன்றைய நிலை வேறுபட்டது, முற்காலத்தைப் போலன்றி இக்காலத்தில் கற்போர் தொகை பன்மடங்காகப் பல்கிப் பெருகிவிட்டது.

சமூகத்தில் இருந்த மேல்மட்டத்தினருக்கு மட்டும் தேவையானதாக அன்று கருதப்பட்ட கல்வி இன்றைய உலகில் ஒவ்வொரு பிரசையினதும் பிறப்புரிமையாக்கப்பட்டு விட்டது. எனவே கற்போர் தொகையின் பெருக்கம் எதிர்பார்க்கப்பட வேண்டியதே. சில சந்தர்ப்பங்களில் கற்போர் தொகை கட்டுக்கடங்காமல் வளர்ந்து விடுவதையும் காணலாம். மாணவர் 'நிரம்பிவழியும்' வகுப்பறைகள் இன்றைய பள்ளிக்கூடங்களில் சர்வசாதாரணமான காட்சிகளாகும். அப்படியான சூழ்நிலைகளில், மாணவர் கற்பதிலும் அவர்களுக்குக் கற்பிப்பதிலும், கட்டுப்பாடு இன்றியமையாத ஒன்ருகின்றது.

எமது மூதாதையர் கடைப்பிடித்த கற்றல் - கற்பித்தல் முறைகளுக்கும் நாம் இன்று கடைப்பிடிக்கும் முறைகளுக்குமிடையே உள்ள வேறுபாடும் கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. மனப்பாடஞ் செய்தே தான் அறிவினைப் பெறவேண்டும் என்ற அன்றைய நிலை இன்று இல்லை. ஒவ்வொரு பாடத்துறைக்கும் வேண்டிய தகவல்களையும் விளக்கங்களையும் கொடுப்பதற்கு அச்சேறிய நூல்கள் பல உண்டு. அவற்றின் உபயோகத்தின் மூலம் தமக்கு வேண்டிய அறிவினைப் பெறலாம் என்ற ஒரு எண்ணம் எமது மாணவரிடையே பரவலாகக் காணமுடிகின்றது. ஆசிரியர் இல்லாமலோ அல்லது ஆசிரியர் கூறுவதை ஊன்றிக் கவனியாமலோ பின்னர் கற்கமுடியும் என்ற எண்ணம் கற்கும் மாணவருடைய கவனத்தை ஒரு வழிப்படுத்துவதற்குப் பதிலாகப் பல திசைப்படுத்தி விடுகின்றது. இதன் காரணமாகவும், கற்றலில் கட்டுப்பாட்டைப்பற்றிக் கட்டாயமாகச் சிந்திக்க வேண்டி ஏற்படுகின்றது.

முதற்கண், கட்டுப்பாடு என்ற பிரயோகம் இன்று எதனைக் குறிக்கிறது என்பதனை நோக்குவோம். எந்த ஒரு விடயத்திலும் எத்தகைய ஒரு செயற்பாட்டிலும், மேற்கொள்ளும் எவ்வித முயற்சியிலும் திட்டவட்டமான ஒழுங்கு முறையில், நேரிய நெறியில் இயங்குவதே இந்தக் கட்டுப்பாடு என்பதனுல் கருதப்படுகின்றது. இவ்விதமான செயற்பாடுகளின்போது தன்னுடைய முன்னேற்றத்துக்கோ அல்லது பிறரது முன்னேற்றத்துக்கோ குந்தகம் விளையாமல் நடக்கவேண்டும் என்பதும் இதனுல் பெறப்படுகின்றது. இக் கட்டுப்பாடு கற்றலுக்குத் தேவைதானு என்ற வினவையும் நாம் எதிர் கொள்ளத்தான் வேண்டும். பலவகைப்பட்ட தனியார் உந்தல்கள், சமூகப் பாதிப்புக்கள், கவனக்குலைப்புச் சக்திகள் ஆகியவற்றின் மத்தியிலும் மாணவன் கற்றலில் வெற்றி காண வேண்டுமேயானுல் கட்டுப்பாட்டை வளர்த்துக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டேயாக வேண்டும்.

வகுப்பறை நெருக்கடிகள், புறச் சூழலின் தாக்கம், மாணவரிடையே காணப்படும் அக்கறையின்மை, ஆகியவற்றின் காரணமாகக் கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகள் இன்றைய வகுப்பறைகளில் 'வழமையான' நிலைமைகளாகிவிட்டன. இப்படியான நிலைமைகளை எதிர்கொள்ளும் வகையில் சில ஆசிரியர்கள் முன்னைய 'சித்திரப் பாவையினத்தக' அடங்கும் நிலையை மாணவரிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். அவர்கள் எதிர்பார்ப்பு முற்கால நிலைமைக்கு எதுவிதத்திலும் தொடர்புடையதாக இல்லையென்பது குறிப்பிட வேண்டும். இன்று எதிர்பார்க்கப்படும் சித்திரப்பாவை போன்ற நிலை மாணவருடைய உடலியக்கம், அசைவு தொடர்பானதாகவே இருக்கின்றது. அக்கம் பக்கத்திலுள்ள மாணவருடைய கற்றலுக்கு இடைஞ்சலாக இருப்பது, தமது

சொந்தக் கல்வியில் அக்கறை கொள்ளாமல் இருப்பது என்பவற்றைத் தடுக்க இத்தகைய 'அசைவற்ற நிலை' அவசியம் என்பது அவ்வாசிரியர்களுடைய கருத்தாகும். ஆனால், உளவியல் கருத்துகள் சார்பாக நோக்கும் போது, மாணவருடைய உளப்போக்கினைச் செம்மைப்படுத்தி நெறிப்படுத்தாமல், வெறுமனே உடலசைவினைக் கட்டுப்படுத்த முயலுதல் பயனற்றதாகும். உளரீதியான பக்குவநிலையை உருவாக்கி, அதற்கூடாக மனத்தைச் செம்மையாக்கிச் செயற்படுத்தி அவர்களிடையே கட்டுப்பாட்டை நிலைநாட்ட வேண்டும்.

இக்கட்டுப்பாட்டினை எப்படி ஏற்படுத்தலாம் என்பதையிட்டுச் சிந்திக்க வேண்டியது ஆசிரியத்துவப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் கரிசனையாகும்.[3] கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு ஒருவழியாக ஒழுங்குவிதிகளை வகுத்து அவற்றை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தினால் போதுமா? அவ்வித வற்புறுத்தல்களை மீறி நடப்பவர்களை என்ன செய்வது. இவை நாம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளாகும். விதிகளை வகுத்து அவற்றைக் கட்டாயமாக அமுல்நடத்த முயற்சிப்பது பேச்சளவில் இலகுவானதாகும். இவ்வழியில் ஏற்படுகின்ற கட்டுப்பாடு மேலிருந்து திணிக்கப்படும் ஒன்று என்பதை நாம் மறக்கக்கூடாது. எப்படியான நன்மையை நல்குவனவாயிருந்தாலும், எவர்மீதும் திணிக்கப்படும் நடைமுறைகள் சில சந்தர்ப்பங்களில்தானும் முறிவுகளுக்கு வழி வகுக்கும் என்பது வாழ்க்கையனுபவ உண்மை. அப்படி முறிவுகள் இடைப்பட்டு விதிகள் மீறப்பட்டால் என்ன செய்வது என்ற வினவுக்கும் விடை காணப்பட வேண்டும். அதற்குப் பரிகாரமாக வழங்கப்படும் 'தண்டனை' ஒருபோதும் மாற்றுவழியாகாது.[4] ஆகக்கூடியது அது ஒரு இடைக்காலத் தடையேயாகும்.

கட்டுப்பாட்டினை நிலைநாட்டுவதற்கு ஒரு வழியாகத் தண்டனையைப் பயன்படுத்தும்போது அதனால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளையும் நாம் கருத்திற் கொண்டேயாக வேண்டும். ஒரு மாணவன் தண்டிக்கப்படும் போது அதுவும் அவனது சகமாணவரின் முன்பாக, அவனுடைய உள்ளத்தில் பாரிய தாக்கம் ஏற்படக்கூடும். உண்மையில் அவன் குற்றம் புரிந்தவனாக இருந்தாலும் தனக்கு வழங்கப்படும் தண்டனையை ஏற்றுக்கொள்ளக்கூடிய உளமுதிர்ச்சி மாணவர் மட்டத்தில் எதிர்பார்க்க முடியுமா என்பது கேள்விக்குரியது. அம் முதிர்ச்சி இல்லாத நிலையில் ஆசிரியருடைய தண்டனையைத் தவிர்க்க முடியாமல் அதற்குட்படும் மாணவன் ஒருவன் அக்குறிப்பிட்ட ஆசிரியருக்கு மாறான உளநிலையை உருவாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் எழலாம். இதன் பயனாக, ஆசிரியரிடத்தே மதிப்பை வளர்க்க வேண்டியதற்குப் பதிலாக, வெறுப்பையும் குரோதத்தையும் வளர்ப்பது காணப்படலாம். இத்தகைய நிலைமைகள் மாணவர்களது ஆளுமை விருத்தியிலும் வேண்டத்தகாத வெளித்தோற்றங்களுக்கு வழி வகுக்கும். எனவே, மாணவநிலையில் வைத்துப் பார்க்கின், இவ்வகையான உடல்/உளம் சார்ந்த தண்டனைகள் விரும்பத் தக்கவையன்று.

ஆசிரியர் கோணத்திலிருந்து நோக்கும்போதும் தண்டனைகள் வரவேற்கத் தக்கவையல்ல. இன்றைய காலகட்டத்தில், பள்ளிக்கூடத்தில் அகத்திலும் புறத்திலும் காணப்படுகின்ற நெருக்கிடைகள் மத்தியில், மாணவர்களைத் தண்டிக்க முற்படும் ஆசிரியர்கள் தமது தீர்மானத்தைப்

பற்றி ஆற அமரச் சிந்தித்துச் செயலாற்றும் நிலைமைகளும் இல்லாமற் போய்விடுகின்றன. அப்படியான சந்தர்ப்பங்களில் நீதி செத்துவிட்டதோ என்ற கேள்விக்குறிகளும் எழக்கூடும். அவற்றின் காரணமாக ஆசிரிய மாணவ உறவில் நம்பிக்கையீனம் என்ற 'நஞ்சு' கலந்துவிடக்கூடும். உறவில் சுமூகமில்லாத கற்கும் சமூகம் அதன் செயற்பாடாகிய கற்றல்–கற்பித்தல் கடமையில் வெற்றிகாண முடியாது.

'கல்வி என்னும் பயிருக்குக் கண்ணீர் என்னும் நீர் வேண்டும்' என்றும், 'நல்ல குருநாதர் நம்மை வருத்துவது ……பொல்லாக் குணங்கள் போக்குவதற்கே' என்றும் கருதிய காலம் கடந்துவிட்டது. இருப்பினும், கற்றல் வெற்றிகரமாக நடைபெறுவதற்குக் கட்டுப்பாடு இன்றியமையாதது என்பது எவரும் மறுக்க முடியாது. எனவே தண்டனை தவிர்ந்த மாற்றுவழிகளைச் சிந்திக்கவேண்டியது அவசியம். அவற்றுள் ஒன்று கட்டுப்பாட்டின் தேவையினை மாணவர் உணரச் செய்தலாகும். தமது கற்றலின் முன்னேற்றத்துக்குக் கட்டுப்பாடு அவசியம் என்பதைக் கண்டுகொண்டால் அதற்கு அமைந்து நடக்க மாணவர்கள் என்றும் தயாராக இருப்பர். அதற்கேற்ப, அவர்களுடைய சுயவெளிப்பாடுகளின் அடிப்படையிலேயே கட்டுப்பாட்டு விதிகளையும் உருவாக்கிக் கொள்ளலாம். இவை 'மேலிருந்து' திணிக்கப்படும் விதிகளுக்குப் பதிலாகக் 'கீழிருந்து' முளைத்து வருபவை / வளர்ந்துவருபவை என்றபடியால் அவை நிலைத்து நிற்கக்கூடியவை. அத்துடன் தம்முடைய தேவைகளினடிப்படையில் தாமும் சேர்ந்து ஆக்கிக் கொள்ளும் விதிகளை மாணவர்களே காத்துக்கொள்ளுவர். அவற்றை நடைமுறைப்படுத்துவதில் எவ்விதத்திலும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிராது.

கட்டுப்பாட்டின்மைக்குக் காரணிகளாகக் காணப்படுகின்ற சூழ்நிலைகள் அம்சங்கள் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. அவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒரு விடயத்தையும் கவனத்திற்கெடுத்தல் பொருத்தமானது. அதாவது, கற்றலில் கட்டுப்பாடின்மைக்கான காரணிகளில் ஒன்றான மாணவர் அக்கறையின்மைக்கு அடிப்படை என்ன என்பதாகும். ஒருவனுக்கு விருப்புள்ள எதிலும் அவனுக்கு அக்கறையின்மை ஏற்பட நியாயமில்லை. கற்றலிலும் அதனை வழமையெனக் கொள்ளலாம். அதனை ஏற்றுக்கொள்ளின் மாணவர் அக்கறையின்மைக்கு அவர்கள் கற்கும் விடயங்கள் அவர்களுக்குச் சுவையளிக்கவில்லை என்பது பெறப்படுகின்றது. இதன் பின்னணியில் கற்கும் விடயம், கற்பிக்கும் முறைகள் என்பன காணப்படுகின்றன. தாம் கற்கும் விடயங்கள் தமக்குப் பயனளிக்கவில்லை என்றுணரும் மாணவர் அவற்றில் ஈடுபாடு காட்டாமலிருத்தல் இயல்பே. தாம் கற்கும் கல்வி தமது உடனடிப் பிரச்சினைகளையோ அல்லது எதிர்காலப் பிரச்சினைகளையோ தீர்க்கமாட்டாது என்ற எண்ணம் மாணவரிடையே விரக்தியையும் வெறுப்பையுமே வளர்க்கும். இதன் விளைவு இருவகைப்பட்டதாகும். ஒன்று வகுப்பறைக் கற்றலில் எதுவித கவனமுஞ் செலுத்தாமல் இருப்பது, மற்றையது, கூடிய தாக்கத்தை ஏற்படுத்துவது, கல்வியின் பயனற்றநிலை காரணமாக மாணவர் கல்விக்கே 'முழுக்குப்' போட்டுவிடுவது. பள்ளிக்கூடக் கல்வியில் இடைவிலகலுக்கு முக்கிய காரணம் இதுவென்பது 1972ஆம் ஆண்டில் இலங்கைக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 'கல்வியின் புதியபாதை' சுட்டிக்காட்டுகின்றது.[5] இதைத் தவிர்ப்பதற்குக் கல்வியானது வாழ்க்கைத் தொடர்புள்ளதாக அர்த்தமுள்ளதாக

இருக்கவேண்டுமென்பது அன்றைய விதப்புரை. அது இன்னும் பொருந்துவதாகும். வாழ்க்கைக்குப் பொருந்துவதாய், யதார்த்த இயல்புடையதாய்க் காணப்படும் கலைத்திட்டம் மாணவருக்குக் கற்றலில் கரிசனையை ஏற்படுத்தும்.

கற்பிக்கும் முறைகளில் பொருத்தமின்மையும் மாணவர் அக்கறையின்மைக்குப் பொறுப்பான காரணமாகும். புதிய விடயங்களைக் கற்கலாம் என்ற ஆர்வத்துடன் பள்ளிக்கூடத்தை அணுகும் மாணவருக்கு அப்புதிய விடயங்களைப் புரிந்துகொள்ள முடியாமலோ அல்லது அவற்றை நாடவிடாமலோ ஆசிரியரின் கற்பித்தல் முறை அமைந்தால் மாணவனுக்கு ஏற்படப்போவது வெறுப்புத்தான். அதைவிடுத்து ஆசிரியரின் அணுகுமுறைகள் கவர்ச்சியானவையாகவும், எளிமையானவையாகவும் இருந்தால் நாட்டம் தானாகவே வரும். மாணவரிடையே கற்றலில் நாட்டத்தை ஏற்படுத்துவதில் அவர்களுடைய பருவம், முதிர்ச்சி, அனுபவம் ஆகியவற்றைக் கணிப்பிற் கொள்ளவேண்டும். ஒரேவகுப்பில்தான் கற்கின்றார்கள் என்றாலும், எல்லா மாணவரும் அடைவுநிலையில் சமமாக இருப்பார்கள் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. சிலர் 'மெதுவாகக் கற்பவர்களாய்' இருக்கும்போது ஏனையோருடன் ஒரே அளவில் வைத்து அவர்களை மதிப்பிட முடியாது. இத்தனியாள் வேறுபாடுகளைக் கருத்திற்கொண்டு எமது கற்பித்தல் முறைகளைப் பொருத்தியமைத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், பின்னடைவு நிலையில் இருப்பவர்கள் கல்வியில் கரிசனையற்றுக் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகளை உருவாக்கலாம். எல்லோரையும் கற்றலில் ஈடுபடுத்தும் முறையில் கற்பித்தல் நிகழ்ந்தால் கற்றலில் கட்டுப்பாட்டினை வலிந்து புகுத்தவேண்டி நேரிடாது.

எனவே, கற்றல் முயற்சியில் வெற்றிகாண வேண்டுமேயானால், மாணவர் மனத்தை ஒருவழிப்படுத்தக்கூடிய உத்திகள் கையாளப்பட்டாலே அதனைச் சாதிக்கமுடியும். மனம் ஒருவழிப்பட்டுச் செயற்படும் மாணவ சமுதாயத்தில் கட்டுப்பாடு ஒரு பிரச்சினையாக இருக்காது. அத்தகைய ஒரு சந்ததியினர் தமது கல்வியில் ஏற்றம் காண்பது மட்டுமன்றி அதன்மூலம் தமது சமுதாயத்துக்குத் தலைமைதாங்கத் தகுதியுடையவருமாவர். கட்டுப்பாட்டின் உயர்வினை உணர்ந்து அதனைக் கடைப்பிடித்து ஒழுகக்கூடியவர்களே தமது தலைமைத்துவத்தில் பிறரை வழிநடத்தி வெற்றிகாண்பர். அவர்களின் வழியிலேயே சமுதாயம் தனது இலக்குகளை, தான் எண்ணியவாறு, எய்த முடியும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப — எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(குறள்: 666)[6]

## அடிக்குறிப்புக்கள்

1. நீதிநூல் தொகை, இரண்டாம் பாகம் (சென்னை: ஸ்ரீமகள் கம்பெனி, 1952), ப. 103.
2. ஆறுமுகநாவலர் (பதி.), நன்னூல் காண்டிகையுரை, 22ஆம் பதிப்பு (சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திர சாலை, 1958), ப. 33.
3. பார்க்க, ப. துரைக்கண்ணு முதலியார், கல்விக் கலை (சென்னை: அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், 1962), ப. ப. 327 – 334.
4. பார்க்க, GILBERT HIGHET, The Art of Teaching (London, Methuen & Co., Ltd., 1951, Reprint 1985), pp. 142 – 145.
5. பார்க்க, இலங்கை கல்வி அமைச்சு, கல்வியின் புதியபாதை (கொழும்பு: கல்வி அமைச்சு, 1972), ப. ப. 8 – 17.
6. திருக்குறள், பரிமேலழகர் உரை.